T.C : 019

001/DD/21

| Register Number | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

# DEPARTMENTAL EXAMINATIONS

## SECOND CLASS LANGUAGE TEST — PART – A WRITTEN EXAMINATION (TRANSLATION, COMPOSITION, LETTER WRITING AND LANGUAGE SKILLS)

(Without Books)

Maximum Time : 2.30 hours Maximum Marks : 100

குறிப்பு :

1. அனைத்து வினாக்களுக்கும் விடையளி.

2. வினாத்தாள் மூன்று பகுதிகளைக் கொண்டது.

3. கையெழுத்து தெளிவாகவும், விடைகள் குறித்த அளவினதாகவும் இருத்தல் வேண்டும்.

பகுதி — I

1. ஆங்கிலப் பத்தியைத் தமிழாக்கம் செய்க. (10)

Trees are very useful to us. They give us timber and fire wood. The timber is used to make chairs, tables and other furniture. We get oil from the oil seeds of some trees. The leaves and fruits of some trees are used to prepare medicines.

கீழ்க்காணும் தலைப்பில் ஒவ்வொன்றிற்கும் 150 சொற்களுக்கு மிகாமல் கட்டுரை எழுதுக. $(2 \times 15 = 30)$

2. அன்றாட வாழ்வில் அறிவியல்.

3. சுற்றுச்சூழல் பாதுகாப்பில் சமுதாயத்தின் பங்கு.

4. ஈட்டிய விடுப்பை ஒப்படைப்பு செய்து, அதற்குரிய ஊதியம் இதரப்படிகளைப் பெறுவதற்கு விண்ணப்பம் உரிய அலுவலருக்கு எழுதுக. (10)

[Turn over

## பகுதி — II

5. கீழ்க்காணும் உரைநடைப் பகுதியைப் படித்து கீழ்காணும் வினாக்களுக்கு விடையளி. (5)

கடையெழு வள்ளல்களுள் ஒருவரான மலையமான் திருமுடிக்காரிக்கும் கிள்ளிவளவனுக்கும் பெரும்பகை இருந்தது. மலையமான் சிறந்த வீரன். அவனுக்கு இரு பிள்ளைகள் இருந்தனர். மலையமானை அடக்கமுடியாத சோழன் கிள்ளிவளவன், அவன் பிள்ளைகள் இருவரையும் கவர்ந்து சிறை வைத்தான். அவர்களைத் தன் பட்டத்து யானையின் காலால் இடறிக்கொல்ல முடிவு செய்தான். பகைவனை அழிக்க இதுவே வழியெனக் கருதினான். அதற்கான நாளையும் குறித்தான். சிறுவர் இருவரும் யானையைக் கண்டு மருண்டனர்; அஞ்சி நடுங்கினர்; வியந்து நோக்கினர்

வினாக்கள் :

(அ) யார் யாருக்கும் பகை இருந்தது?

(ஆ) மலையமானுக்கு எத்தனை பிள்ளைகள் இருந்தனர்?

(இ) சோழன் கிள்ளிவளவன் யாரைச் சிறைவைத்தான்?

(ஈ) பிள்ளைகள் இருவரையும் எவ்வாறு கொல்ல முடிவு செய்தான்?

(உ) யானையினைக் கண்ட பிள்ளைகளின் நிலை எவ்வாறு இருந்தது?

6. கீழ்க்காணும் சூழலைப் படித்து உரையாடலை நிறைவு செய்க. (5)

(வங்கியில்)

வங்கி ஊழியர் : ____________

வாடிக்கையாளர் : சேமிப்புக் கணக்கு துவங்க வேண்டும் ஐயா.

வங்கி ஊழியர் : ____________

வாடிக்கையாளர் : ஆதார் நகல் எடுத்து வரவில்லை ஐயா.

வங்கி ஊழியர் : ____________

வாடிக்கையாளர் : வீட்டிற்குச் சென்றுதான் எடுத்து வரவேண்டும். நாளை கொண்டு வருகிறேன்

வங்கி ஊழியர் : ____________

வாடிக்கையாளர் : எடுத்து வந்துள்ளேன் ஐயா.

வங்கி ஊழியர் : ____________

வாடிக்கையாளர் : சரிங்க, ஐயா.

## பகுதி — III

### மொழிப் பயிற்சி

பின்வரும் வினாக்களுக்கு விடையளி : (40)

7. முதல் எழுத்துகள் மொத்தம் எத்தனை?

8. திருவடி – பிரித்து எழுதுக.

9. 15 – தமிழெண்ணை எழுதுக.

10. உயர்வு – சொற்றொடரில் அமைத்து எழுதுக.

11. September – மாதத்தின் பெயரைத் தமிழில் எழுதுக.

12. ஞாயிற்றுக்கிழமைக்கு அடுத்த கிழமை எது?

13. மாசி மாதத்திற்கு முந்தைய மாதம் எது?

14. நனி – பொருளறிக

உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

15. உறாஅர்க் குறுநோய் உரைப்பாய் – இத்தொடரில் —————— அளபெடை இடம் பெற்றுள்ளது.

(அ) இன்னிசை

(ஆ) செய்யுளிசை

(இ) சொல்லிசை

உரிய நிறுத்தற்குறி இடுக.

16. ஒற்றளபெடை என்றால் என்ன ஐயா

17. எனக்கென நேரம் ஒதுக்கி மனம் திறந்து பேசினீர்கள் மிக்க நன்றி ஐயா

சந்திப் பிழையைத் திருத்தி எழுதுக.

18. காவேரி பூம்பட்டினத்தில் வாணிக பொருள்கள் மண்டிகிடந்தன.

ஒருமைப் பன்மைப் பிழையை நீக்கி எழுதுக.

19. தமிழர்களின் வாழ்வில் இசை சிறந்த இடத்தைப் பெற்றிருந்தன

விடைக்கேற்ற வினா எழுதுக.

20. திரைப்படம் எடுப்பதனைவிடச் செய்திப்படம் எடுப்பது கடினமான பணியாகும்.

21. நடிப்புக்கலையையும் அரசியலையும் தம் இருகண்களாக எம்.ஜி. இராமச்சந்திரன் கருதினார்.

வினைச்சொல்லை எடுத்தெழுதுக :

22. மரம் ஆடியது

ஏற்ற வினைமுற்றைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

23. இருவர் —————— (பாடியது, பாடின, பாடினர்)

விடுபட்ட எழுத்துக்களை நிரப்புக.

24. தி, தீ, ____, ____, தெ, தே, ____, ____.

குறிலை நெடிலாக்கிப் புதிய சொல்லை உருவாக்குக.

25. மின்

26. பாண்டிய நாட்டின் வளம் பெருக்கிய துறைமுகம் எது?

இருபொருள் தருக.

27. திங்கள்

பொருத்தமான பெயர்ச்சொல்லை இட்டு நிரப்புக.

28. ____________ பூத்தது.

பொருத்தமான மரபுச்சொல்லை எடுத்தெழுதுக.

29. குயில் ____________ (கூவியது, அகவியது)

30. ஆட்டு ____________ வருகிறது (கூட்டம், மந்தை)

இளமைப் பெயரை எழுதுக.

31. சிங்கம்

பேச்சு வழக்கு சொற்களுக்கு உரிய எழுத்து வழக்குச் சொற்களை எழுதுக.

32. தலகாணி

பொருந்தாதச் சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

33. குருகு, கிளி, புறா, நாய்.

அகர வரிசைப்படுத்துக.

34. குறுவை, கீரி, கிளி, காண், கண்.

பொருத்துக.

35. பெயர்ச் சொல் – வந்தான்

36. வினைச்சொல் – ஐந்தும் ஆறும்

37. இடைச்சொல் – மாவீரன்

38. உரிச்சொல் – வேலன்

உரிய வேற்றுமை உருபை இணைத்து எழுதுக.

39. வேல்விழி திருக்குறள் படித்தான்

40. Dubbing – கலைச்சொல்லைத் தமிழாக்கம் செய்க.

உவம உருபை எழுது.

41. மலரன்ன சேவடி

42. B.Ed. இப்பட்டப் படிப்பைத் தமிழில் எழுதுக.

எதிர்ச்சொல் அறிக.

43. மெய்

உருவகத்தை உவமையாக மாற்றுக.

44. கண்கயல்

பெயர்ச்சொல்லைக் கண்டறிந்து, திணையை எழுதுக.

45. வளவன் படித்தான்

பிறமொழிச்சொல்லை நீக்கி, உரிய தமிழ்ச்சொல்லை எழுது.

46. அவர் உடற்கூறு மருத்துவத்தில் மிகச் சிறந்த நிபுணர்.

---